**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 368/2018**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் நாள் சனிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 25.10.2025 | | |
| பெயர்: | செல்வம் (PW–4 Cross ) | தகப்பனார் பெயர்: | வேணு |
| கிராமம்: | சந்தப்படுகை | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 53 /2025 |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 25.10.2025</u>

**(ஆரம்பித்த நேரம்– 13.51)**

1. தாவா சொத்து சந்தப்படுகையில் உள்ளது. சர்வே எண் தெரியாது. என்ன வகைப்பாடு என்றால் நஞ்சை. அதன் விஸ்தீரணம் சுமார் 120 குழி இருக்கும். தாவா சொத்தின் கிழக்கில் சரவணன் வயல், மேற்கில் முருகன் வயல், வடக்கில் மனோகரன் வயல், தெற்கில் முத்தலீப் பாய் வயல் நான்கெல்லையாக உள்ளது. இந்த வழக்கை யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் செல்வம், செல்வநாயகி, பழனி மீது தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வாதி நிலத்தை பிரதிவாதிகள் கிரயம் செய்வதற்கு முயற்சி செய்தார்கள், அதனால் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. தாவா சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதியின் தகப்பனார் பெயர் பரதேசி. ராகவேந்திர ராவ் இறந்து சுமார் 40 வருடங்கள் இருக்கும் என்றால் அவர் இறந்தது பற்றி எனக்கு தெரியாது. ராகவேந்திர ராவை நான் பார்த்ததில்லை. தாவா சொத்து நரசிங்க ராவுக்கு சொந்தமானது என்றால் இல்லை. வாதி ராகவேந்திர ராவிடமிருந்து

குத்தகைக்கு ஒப்புக்கொண்டு சாகுபடி செய்து வந்தார் என்று நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

3. ராகவேந்திர ராவுக்கும் வாதியின் தகப்பனாருக்கும் எப்போது குத்தகை ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, ஆனால் வாதியின் தகப்பனார் சாகுபடி செய்தார், தற்போது வாதி சாகுபடி செய்து வருகிறார். ராகவேந்திர ராவுக்கும் வாதியின் தகப்பனாருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றி எனக்கு தெரியாத காரணத்தால் வாதியின் தகப்பனார் சாகுபடி செய்துவந்து தற்போது வாதி சாகுபடி செய்து வருகிறார் என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல.

4. ராகவேந்திர ராவிடம் குத்தகை செலுத்தியது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. தாவா சொத்தை பொறுத்து வாதியின் தகப்பனாருக்கோ வாதிக்கோ எந்த குத்தகையும் ஏற்படவில்லை, அனுபவமும் இல்லை, வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் போர்வெல் என்பதே இல்லை என்றால் சரியல்ல, 2 போர்வெல் வயலில் உள்ளது.

5. தாவா சொத்து நரசிங்க ராவிற்கு சொந்தமானது என்றால் சரியல்ல. அவர் இறந்தபிறகு அவரது வாரிசுதாரர்களிடம் அனுமதி பெற்று கடந்த 2000 வருடம் முதல் பிரதிவாதிகள் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதன்பிறகு 2019ம் வருடம் பிரதிவாதிகள் தாவா சொத்தை நரசிங்க ராவின் வாரிசான கங்கா பாயிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. அதன்பிறகு கங்கா பாய் பரமசிவம் என்பவரிடம் தாவா சொத்தை விற்பனை செய்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன்பிறகு தாவா சொத்து பரமசிவத்தின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

6. பரமசிவம் தாவா சொத்தை அனுபவிப்பதற்கு இந்த வழக்கின் வாதி இடையூறு செய்யக்கூடாது என்று இந்நீதிமன்றத்தில் அ.வ.எண். 176/2019ல் இடைக்கால உறுத்துக்கட்டளை பெறப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி எனக்கு ஊர்க்காரர் என்ற காரணத்தால் அவருக்கு ஆதரவாக

நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 14.12)**